முதல்வரின் ‘திராவிட மாடல்’ நல்லாட்சியில் - வரலாறு காணாத வகையில்

தொழில் துறையில் தமிழ்நாடு - பெரும் பாய்ச்சலோடு பீடு நடைபோடுகிறது!

சட்டப்பேரவையில் தொழில் துறை மானியக் கோரிக்கையில்

23 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பதிலுரை!

சென்னை, ஜூலை 1- சட்டப்பேரவையில் தொழில் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பதிலுரை அளிக்கையில் முதல்வரின் திராவிட மாடல் நல்லாட்சியில் தொழில் துறை வரலாறு காணாத வகையில் பெரும் பாய்ச்சலோடு பீடு நடை போட்டு வருகிறது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

பேரவையில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பதிலுரை வருமாறு:-

உலகெங்கும் வாழும் தமிழர்களின் உள்ளங்களில் நீங்காத இடம் பிடித்து, தமிழ்நாட்டின் இன்றைய வளர்ச்சிக்கு வித்திட்டு, 50 ஆண்டுகாலம் தமிழ்நாட்டின் மகத்தான மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை கட்டிக் காத்து, தமிழகத்தை தனித்துவம் மிக்க மாநிலமாக செதுக்கியெடுத்த, எனது ஆருயிர் தாத்தா முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். 1989லும், 1996லும் தலைவர் கலைஞர் அவர்களாலும், 2006ல் இன்றைய நமது முதலமைச்சர் அவர்களே, தான் வகித்து வந்த பொறுப்பை மன்னார்குடி மண்ணின் மக்கள் பிரதிநிதியான எனக்கு வழங்கியிருக்கும் எனது பாசமிகு தலைவர், தனது அயராது உழைப்பினாலும், அசராத தன்னம்பிக்கையினாலும், தமிழக அரசியலில் தனி தடம் பதித்த திராவிட மாடல் அரசின் மாசற்ற, ஈடு இணையற்ற முதலமைச்சராகவும், ஒவ்வொரு நாளும் புதிய மக்கள் நல திட்டங்கள் மூலம் ஒட்டு மொத்த இந்தியாவின் பெரும் மதிப்பை பெற்று, உலக நாடுகளும் தனது திட்டங்களை பின்பற்றும் அளவுக்கு, ஒரு தனித்துவம் மிக்க தலைவராக வரலாற்றில் உயர்ந்து நிற்கும் தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயகன் அவர்களையும் வணங்குகிறேன். எனது அரசியல் வாழ்க்கையில் பல ஆலோசனைகளை வழங்கி, அரசாங்க செயல்பாடுகளில் எனக்கு ஆசிரியர்களாக திகழும், அவை முன்னவர் மற்றும் மூத்த அமைச்சர் பெருமக்களை வணங்குகிறேன்.

கல்லூரி பருவம் முதல் இன்று வரை எனது நண்பராகவும், சகோதரராகவும் திகழ்ந்து, திராவிட சித்தாந்த உரையாடல் மூலமாகவும், விவாதங்களின் மூலமாகவும், தனக்கே உரிய கலைஞர் பாணி பேச்சாற்றல் மூலமாகவும் அரசியல் வழிகாட்டியாகவும், கழகத்தின் தொடர் வெற்றிகளில் பெரும் பங்காற்றி, உடன்பிறப்புகளின் அன்பை பெற்று இன்று “இளம் தலைவராக” உயர்ந்து நிற்கும் நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது தந்தையாக மட்டுமல்லாமல், தலைவர் கலைஞர் அவர்களின் அசைக்கமுடியாத பக்தனாக இருந்து, தனது பாதை மாறாப் பயணத்தின் மூலம் “உடன்பிறப்பே” என்ற ஒற்றை வார்த்தைக்கு முழு அர்த்தத்தையும் புரிய வைத்த எனது தந்தையார் உள்ளிட்ட எனது குடும்பத்தினர் அனைவருக்கும், எனது அரசியல் பயணத்தின் போது துணை நின்ற மறைந்த முன்னாள் அமைச்சர் எனது ஆருயிர் அண்ணன் அழகு திருநாவுக்கரசு அவர்களுக்கும், முன்னாள் நகர மன்ற தலைவர் பழமணி அவர்களுக்கும், இன்றும் கழகத்திற்கு மிகப்பெரிய வலுசேர்த்துக் கொண்டிருக்கும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜமாணிக்கம்,தலையாமங்கலம் பாலு, வீரா.கணேசன், ஞானசேகரன், தன்ராஜ் ஆகியோருக்கும் கழகத்தின் அனைத்து செயல்வீரர்களுக்கும், எனது ஆருயிர் மாவட்ட கழகச் செயலாளருக்கும் எனது வணக்கங்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று முறை தொடர்ந்து என் மீதும், கழகத்தின் மீதும் நம்பிக்கை வைத்து, திராவிட முன்னேற்ற கழகத்திற்கு hattrick வெற்றியைத் தந்த எனது பெருமைவாய்ந்த “மின்னும் மன்னை” தொகுதி மக்களுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், எதிர்வரிசையில் அமர்ந்திருக்கும் அனைத்து கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது உறுப்பினர்கள் சிலர் பேசுகையில், ஒரு சிலவற்றை கோரிக்கைகளாகவும், சில வற்றை கருத்துகளாகவும் இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். அவைகுறித்து ஓரிரு வரிகள் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி பேசும்போது, இந்தத் துறைக்கு நிதி குறைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள். உங்கள் அக்கறைக்கு மிகுந்த நன்றி. அதை, மேலும் சற்று அழுத்தமாக நம்முடைய நிதித் துறை அமைச்சர் அவர்களிடமும் நீங்கள் சொல்வீர்கள் என்று நம்புகிறேன். ஆனால், நீங்கள் வருத்தப்பட வேண்டாம். நிதித் துறை அமைச்சர் அவர்கள், எனக்கு முன்பாக இந்தப் பொறுப்பை அலங்கரித்தவர். எனவே, எனது வலிகளையெல்லாம் முழுமையாகப் புரிந்தவர் அவர் என்ற முறையில், இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கும்போது, நமது துறையைப் பொறுத்தவரை, பெருமளவில் subsidiesதான் வழங்குகிறோம். தேவைப்படும்போதெல்லாம் எந்தெந்த நிறுவனங்கள் வருகின்றனவோ, அப்போது incentives கொடுக்கிறோம். அவ்வாறு நிறுவனங்கள் வரும்போது, கேட்கும்போதெல்லாம் நிதியைக் கொடுக்கின்ற மாபெரும் தலைவராக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிள்ளையாக திராவிட நாயகன் நமது முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள். எனவே, தொழில் துறைக்கு அள்ளி, அள்ளி, வாரி வாரி வழங்கிக் கொண்டிருப்பதால்தான் தொழில் துறை இன்றைக்கு இந்தளவிற்கு வளர்ந்திருக்கிறது.

கடந்த வருடம் Global Investors Meetக்கு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதுவும் இந்த ஆண்டில் குறைந்திருக்கிறது. இந்த ஒரு காரணத்தினால்தான் நிதி குறைப்பு.

கோத்ரெஜ் நிறுவனம் என்ன செய்கிறது, அதனுடைய development எவ்வாறு இருக்கிறது என்று கேட்டார்கள். டிசம்பர் மாதத்தில் கோத்ரெஜ் நிறுவனத்தின் தொழிற்சாலை, தனது உற்பத்தியைத் துவங்கும் என்கிற மகிழ்ச்சியான செய்தியையும் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்த கோத்ரெஜ் நிறுவனம் வெகுவிரைவில் தஞ்சை தரணியில் Palm oil உற்பத்தியையும் மேற்கொள்ளவிருக்கிறது என்ற செய்தியையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

EV chargers. EVஐப் பொறுத்தவரை, Electric Vehiclesஐ எவ்வாறு நீங்கள் ஊக்கப்படுத்து கிறீர்கள் என்று நீங்கள் கேட்டீர்கள். அதற்கு குறிப்பாக, charging facility availabilityஐ all over Tamil Nadu உருவாக்க வேண்டும். அதை இந்தத் துறை முனைப்புடன் செய்து வருகிறது முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி. ஒரு scrapping policyயும் அரசின் கவனத்தில் இருக்கிறது. அது நடைமுறைக்கு வரும்போது மேலும் ஊக்கப்படுத்தப்படும்.

சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் A.R.R. ரகுராமன் அவர்கள் என்னை நேரடியாகச் சந்தித்தார்கள். ஆலங்குளம் cement plant slow down ஆகிக்கொண்டிருப்பதாக வருத்தப்பட்டார்கள். அப்படியெல்லாம் எந்தவொரு பிரச்சினையும் அங்கு இல்லை. எனவே, அதுகுறித்து நீங்கள் கவலைகொள்ள வேண்டாம். ஆலங்குளத்திலும் சரி, அரியலூரிலும் சரி, சிமெண்ட் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கான வேலைகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. எனவே நீங்கள் கவலைப்படாமல் இருங்கள். தங்கள் குடும்பத்தினர் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு நிலத்தைக் கொடுத்ததற்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீப்பெட்டி தொழிற்சாலைகளின் நலன்!

Cigarette Lighter குறித்தும் கேட்டீர்கள். அந்த விஷயத்தைப் பொறுத்தவரை, முதலமைச்சர் அவர்கள்தான், முதன்முதலாக ஒன்றிய அரசிற்குக் கடிதம் எழுதி, அதன் பிறகுதான் ஒன்றிய அரசு அதை கவனத்தில் எடுத்து, lighter சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தது. இவ்வாறு இங்குள்ள தீப்பெட்டித் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாத்திட்ட ஒரு மாபெரும் முதலமைச்சராக, தலைவராக, குடும்பத் தலைவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள். தற்போது வருவதில் நிறைய infiltration இருப்பதாகச் சொல்கிறார்கள். தவறான முறையில் அதிகளவிலான புதிய lighters இங்கே வருவதாகச் சொல்கிறார்கள். அதையும் தடுக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அரசு அதையும் கவனத்தில்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் SIPCOT வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். இன்று காலை முதல் இங்கே பல உறுப்பினர்களும் சிப்காட் தொழிற்பூங்காக்களை புதிதாக உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அனைவரும் அந்தந்தப் பகுதிகளில், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்தவொரு பாதிப்புமில்லாமல் நிலத்தை எடுத்துத் தந்தால். . விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்தவொரு பாதிப்புமில்லாமல் நிலத்தை எடுத்துத் தந்தால் நிச்சயமாக புதிய சிப்காட் தொழிற்பூங்காக்களை உருவாக்குவதற்கான பணியை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராமச்சந்திரன் பேசும்போது, NTTF Skill Training centre என்னவாயிற்று என்று கேட்டிருந்தீர்கள். அதற்கு கட்டுமானப் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. அப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

சூளகிரியில் industrial housing project தொடர்பாக DFR கோரப்பட்டு, அந்தப் பணியும் துவங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் இங்கே தெரிவித்துக்கொள்வதோடு, உறுப்பினர்கள் பலரும் வைத்த பல கோரிக்கைகளையும் இந்த அரசு கனிவுடன் பரிசீலித்து வருகிறது என்பதையும், அவை முதலமைச்சர் அவர்களின் பார்வையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நவீன தமிழகத்தின் சிற்பி, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்கு சிந்தனையால், இந்தியாவில் பிற மாநிலங்களுக்கு முன்பே தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெரிய அடித்தளம் அமைக்கப்பட்டது. அதில் மிக முக்கியமாக 1971 ஆம் ஆண்டில், தமிழகத்தில் சிப்காட் தொழிற்பேட்டை உருவாக்கும் பணியை தொடங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். இதன்மூலம் தமிழகத்திற்கு மிகப் பெரிய தொழில் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டது.

அன்று முதல் இன்று வரை, அதாவது, 2021 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் ஏறத்தாழ 24 சிப்காட் தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட்டன. அதாவது 50 ஆண்டுகளில் 24 சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டு நமது விடியல் ஆட்சி பிறந்த பிறகு நமது முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்பட்டபிறகு தொழில் வளர்ச்சிக்கு அவர் கொடுத்த முக்கியத்துவத்தினால் திராவிட மாடல் அரசின்மூலம் மூன்றே ஆண்டுகளில், 16 சிப்காட் பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்ற அந்த மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைத்தாண்டி மேலும் 21 புதிய சிப்காட் பூங்காக்கள் அமைப்பதற்கான பணியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இதுவரை 50 ஆண்டுகளில் 24 பூங்காக்கள் என்றால், இந்த மூன்றே ஆண்டுகளில் 37 புதிய பூங்காக்களுக்கான பணிகள் துவங்கியிருக்கின்றன என்று சொன்னால் இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தருணம். ஏற்கெனவே 16 பூங்காக்களுக்கான பணிகள் நிறைவுசெய்து முடிக்கப்பட்டுள்ளன. விரைவில், தமிழ்நாட்டில் 50வது சிப்காட் பூங்காவை நமது முதலமைச்சர் அவர்கள் துவக்கிவைப்பார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிக அளவில் தொழிற்சாலைகள்!

இன்று தமிழ்நாட்டில் 39,512 தொழிற்சாலைகள் உள்ளன. இந்திய அளவில் அதிகமான தொழிற்சாலைகள் இருக்கும் ஒரு மாநிலமாக நமது மாநிலம் இன்று திகழ்கிறது. முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஆண்டுக்கு 10 இலட்சம் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்று உறுதி அளித்தார். அந்த வாக்குறுதிக்கு வலிமை சேர்க்கும் விதமாக தொழில் துறை சார்பாக ஆண்டு ஒன்றிற்கு சுமார் 10 இலட்சம் வேலை வாய்ப்புகள் என்ற வகையில், தொழில் துறையின் மூலமாக மட்டும் 31 இலட்சம் வேலைவாய்ப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் காட்டியுள்ளார்கள் என்று கூறுவதில் தொழில் துறை பெருமை அடைகிறது.

நேற்று முன்தினம் நிதி அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கை உரையில் அதிக வரி வருவாய் கொடுத்த வணிகத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறினார். ஆனால், வணிக வரிக்கு, வணிகம் முக்கியம் என்பதையும், அதற்கு அவர் அலங்கரித்த இந்தத் தொழில் துறை மிகவும் முக்கியம் என்பதையும் அவர் மறந்துவிட்டார். இந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு மொத்த வரி வருவாய் ஏறத்தாழ 7 இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் என்று நான் கருதுகின்றேன். ஆனால் அதே இந்த 3 ஆண்டுகளில் சுமார் 10 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகளைக் கொண்டுவந்து தமிழகத்தில் குவித்துள்ளது திராவிட மாடல் அரசின் இந்தத் தொழில் துறை என்பதில் தொழில் துறை பெருமை கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உலக முதலீட்டாளர்கள் மாநாடு!

இதன்மூலம் கடந்த 3 ஆண்டுகளில் 31 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறோம். குறிப்பாக, கடந்த ஓர் ஆண்டில் மட்டும் சுமார் 7 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்த பெருமை முதலமைச்சர் அவர்களையே சாரும். இதற்கு முக்கிய காரணம் உலகமே வியக்கும் வண்ணம் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட Chennai Trade Centre Phaseல் ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் நடைபெற்ற உலக முதலீட்டார்கள் மாநாடுதான் என்று கூறினால் அது மிகையாகாது.

30க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட அந்த நிகழ்வுகளில் America, England, Singapore, Japan, South Korea, France, Australia, Germany மற்றும் Denmark என 9 பங்குதாரர் நாடுகளும், இரண்டு சர்வதேச பங்குதாரர்களான Taipei Economic and Cultural Centre மற்றும் Western Australia ஆகிய அமைப்புகள் கலந்து கொண்டன.

இதன்மூலம் கடந்த அதிமுக ஆட்சியில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாடுகளின்மூலம் ஈர்க்கப்பட்டதாகச் சொல்லப்படும்—நான் ஏன் சொல்லப்படும் என்று சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். நிறைய சொன்னார்கள். அவ்வளவு எல்லாம் வரவில்லை. அவர்கள் இல்லாத நேரத்தில் அதைப்பற்றிப் பேசினால், ‘நீங்கள் இல்லாத நேரத்தில் பேசிவிட்டீர்கள்’ என்று சொல்வார்கள். அதனால் அவை அடக்கம், அவை மரியாதை கருதி அதனை நான் விட்டுவிடுகிறேன். ஏனென்றால் அவர்கள் இருக்கும்போது விவாதித்தால் அது நாகரிகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். எனவே, அதை ஒதுக்கிவிடுகிறேன். ஆனால் அவர்கள் ஈர்த்ததாகச் சொல்லப்படும் அந்தக் கூட்டுத் தொகையைவிட நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு அதிகமாக ரூபாய் 6,64,180 கோடி அளவிலான முதலீடுகளை ஈர்த்து ஒரு பெருமைவாய்ந்த முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்.

மேலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் அவர்கள் கொண்டுவந்த இந்த இரண்டு GIMல் conversion rateஐ நீங்கள் பார்க்க வேண்டும். பல மாநிலங்கள் பல விஷயங்களைக் கூறுகிறார்கள். நாங்கள் 20 இலட்சம் கோடி ரூபாய், 10 இலட்சம் கோடி ரூபாய், 33 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம் என்றெல்லாம் ஒரு சில பேர் கூறுகிறார்கள். அவர்களுடைய GSDP எல்லாம் பன்மடங்கு அதிகமாகச் சொல்கிறார்கள். ஆனால் நான் கூற விரும்புவது என்னவென்றால், அந்தக் conversion rateஎவ்வளவு முதலீடுகளுக்காக அங்கே MoU போடப்படுகின்றன என்று பார்க்கவேண்டும். அதன்மூலம் எவ்வளவு முதலீடுகள் தொழிலாக மாறி அதன்மூலம் வேலைவாய்ப்புகளாக மாறுகிறது என்பது மிக முக்கியமான ஒரு விஷயம். அதைத்தான் conversion rate என்று கூறுகிறோம். அந்த conversion rateஐப் பொறுத்தவரை மீண்டும் அவர்கள் இல்லாததால் அந்த detailக்குள் போகவில்லை. ஆனால் மிக சொற்பமான conversion rate தான், சென்ற GIM1 மற்றும் 2ல் இருந்தது.

ஆனால், இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், நாங்கள் உறுதி கூறியதைப்போல அந்த மாநாடு நிறைவடையும்போதே முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு committee அமைத்து இதை followup செய்வோம்.

அதை followup செய்து, ஒவ்வொரு MoUவும் convert ஆகிறதை நாங்கள் உறுதி செய்வோமென்று கூறினார். அதை உறுதி செய்து இன்று இந்த 6, 7 மாதங்களில் மட்டும் ஏறத்தாழ 631 MoUக்கள் போடப்பட்டன. 631 MoUக்களில் 379 MoUக்கள் இன்று advanced stageல் இருக்கின்றன. அதாவது 60 சதவிகிதம்; நாங்கள் சொன்னது 50 சதவிகிதத்திற்கு மேல் இருந்தாலே பெரிய விஷயமென்று எல்லாம் சொன்னார்கள். ஆனால், 60 சதவிகிதம் conversion rateஐ உறுதி செய்துள்ள மகத்தான ஒரு முதலமைச்சர்தான் முதலமைச்சர் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம். ஆனால், இந்த மாநாட்டுப் பணிகளைத் தொடங்கும்போது. இந்த மாநாட்டுப் பணிகளைத் தொடங்கும்போது முதலமைச்சர் அவர்கள் எத்தனை இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்ப்பீர்கள் என்று அவர் கேட்கவில்லை. எப்போது போனாலும் அவர் கேட்டதெல்லாம் எத்தனை இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவீர்கள் என்றுதான் கேட்டார். எங்கெங்கே அந்த வேலைவாய்ப்புகளை உருவாக்குவீர்கள் என்றுதான் கேட்டு வந்தார். ஆகையால்தான் ஒரு மாநாட்டின்மூலம் மட்டும் 26,90,657 வேலைவாய்ப்பு களை ஏற்படுத்தும் வகையில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையழுத்திடப்பட்டன.

ஒரு டிரில்லியன் டாலர்!

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டின் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நோக்கி நமது திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களின் பயணம் அதை நோக்கியே இருந்து வருகிறது. ஏனென்றால், அந்த இலக்கை நோக்கி பயணிக்கும் போதுதான் தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமச்சீரான வளர்ச்சி கிடைக்கும் என்பதில் உறுதியாக ஒரு நம்பிக்கையோடு இருந்து வருகிறார். நமது இளைஞர்களுக்கு அப்போதுதான் உயர்தர வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதில் அவர் உறுதியாக இருந்து வருகிறார். “எல்லோருக்கும் எல்லாம்” என்று அவர் கூறுகையில், அதன் முழுமையான பொருளையும் புரிந்து கொண்டு அந்த இலக்கை நோக்கி அவரின் செயல்பாடுகளை அமைத்து வருகிறார். எனவேதான், முதலீட்டாளர்களின் மாநாட்டின்மூலம் வேலைவாய்ப்புகளை உறுதி செய்வ தோடு பரவலாக்கப்பட்ட வளர்ச்சியையும் உறுதி செய்ய வேண்டுமென்று அவர் உறுதியாக இருந்தார். தென் தமிழகத்திற்கும், டெல்டா பகுதிகளுக்கும், மேற்கு மண்டலத்திற்கும் புதிய தொழில் பூங்காக்களும், தொழிற்சாலைகளும் கொண்டு வர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதன் விளைவாகத்தான் மிகப்பெரும் முயற்சிக்குப் பிறகு, உலகமே வியந்த ஒரு பிரசித்தி பெற்ற VinFast மின் வாகன உற்பத்தி நிறுவனம் தூத்துக்குடிக்குக் கொண்டுவரப்பட்டது. அதுவும் மிகப்பெரிய வரலாறு காணாத ஒரு பேரிடரைத் தொடர்ந்து தூத்துக்குடி சந்தித்த அந்த நிலையில் அந்தக் காயங்களுக்கு ஒரு மருந்தாக, தூத்துக்குடி தொழில் வளர்ச்சிக்கு ஒரு புதிய இரத்தம் பாய்ச்சியுள்ளார் நமது முதலமைச்சர் அவர்கள். இதன்மூலம் தூத்துக்குடி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மின் வாகன உற்பத்தி மற்றும் அதைச் சார்ந்த பல புதிய நிறுவனங்கள் அமைந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு உயர்தர வேலை வாய்ப்புகள் நிச்சயம் உறுதி செய்யப்பட்டுள்ளன.

அதேபோல, வரலாற்றில் முதல் முறையாக, நான் ஒரு டெல்டாகாரன் என்று பெருமையாகக் கூறிக்கொள்ளும் நமது டெல்டாகார முதலமைச்சர் அவர்கள் டெல்டா பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக 300 ஏக்கர் பரப்பளவில் 120 கோடி ரூபாய் செலவில் புதிய சிப்காட் தொழில் பூங்காவை அவர் அறிவித்திருக்கிறார், நமது முதலமைச்சர் அவர்கள். இந்தப் பணி தொடங்குவதற்கு முன்பாகவே பல நிறுவனங்கள்; பல நிறுவனங்கள் ஏற்கெனவே நிறைய interest காண்பித்துக் கொண்டு வருகிறார்கள். அதனால் நிச்சயமாக டெல்டா மக்களுக்கு டெல்டாகாரர் நமது முதலமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பை நிச்சயம் உறுதி செய்வார் என்று கூறுவதில் இந்தத் துறை பெருமகிழ்ச்சியடைகிறது. அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சொல்கிறேன். விரைவில் புதுக்கோட்டைக்கும் புதிய சிப்காட்கள் உருவாக்கப்படுமென்ற அந்த மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

100 ஆண்டுகளுக்கு முன்னரே, மிகப்பெரிய தொழில் வளர்ச்சி கண்ட கோவை உள்ளிட்ட மேற்கு மண்டலத்திற்கு அப்பகுதியைச் சார்ந்தவர்கள் ஆட்சியில் இருந்தபோதுகூட எந்த ஒரு புதிய தொழில் வளர்ச்சியையும் கொண்டு வரவில்லை என்ற மக்களின் கோரிக்கையை, ஏக்கத்தை போக்குவதற்காக வாக்களித்தாலும், வாக்களிக்காவிட்டாலும் அனைத்துத் தரப்பு மக்களுக்கான அரசாகவே திராவிட மாடல் அரசு இருக்க வேண்டும் என்பதில் திடமாக இருக்கும் திராவிட நாயகன் அவர்கள், மேற்கு மண்டலத்திற்கு மிக அத்தியாவசிய தேவையான, கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட கோவை விமான நிலையை விரிவாக்கப் பணியை முதலில் கையிலெடுத்தார்.

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஏறத்தாழ 2,100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, அந்த வேலைகள் முழுமையாக முடிக்கப்பட்டு அதுவும் கடந்த 6, 7 மாதங்களில் பல முக்கிய கூட்டங்களைப்போட்டு அந்தப் பணிகள் முழுமையாக இப்போது முடிக்கப்பட்டு வெகு விரைவில் கோவை விமான நிலைய விரிவாக்கப் பணிக்குத் தேவையான அனைத்து நில எடுப்புப் பணிகளும் முடிக்கப்பட்டு வெகு விரைவில் விமான நிலைய விரிவாக்கப் பணிகள் துவங்கும் என்று கூறுவதில் இந்தத் துறை பெருமை கொள்கிறது.

கோவை உள்ளிட்ட மேற்கு மண்டல மக்களுக்கு இந்தச் செய்தி மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் என்று நிச்சயம் நம்புகிறோம். இதன்மூலம் கோவை மக்களுக்கு தோற்றல் நேரத்தில் திமுக கொடுத்த பெரிய வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றுகிறோம் என்ற முறையிலும், சொன்னதைச் செய்யும் திமுக உடன்பிறப்பு என்ற முறையிலும் பெருமை கொள்கிறேன்.

அதே போல, மேற்கு மண்டலத்திற்கு மிகப்பெரிய தொழில் வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் புதிய TIDCOSIPCOT பூங்கா வாரப்பட்டியிலும், சேலத்தில் கைத்தறிப் பூங்காவையும், திருப்பூர் மற்றும் சேலத்தில் Mini TIDEL பூங்காவையும் இந்த அரசு நிறுவி வருகிறது. மிகப்பெரிய வளர்ச்சியை இந்தப் பகுதிக்குக் கொண்டுவருவதில் முதலமைச்சர் அவர்கள் முனைப்பாக இருக்கிறார்.

உறுப்பினர் இரா. அருள் நேற்று இங்கு பேசும்பொழுதுகூட சேலம் விமான நிலைய விரிவாக்கப் பணிகள் குறித்து கேட்டார். அதில், விமான நிலையத்திற்கு 177 ஏக்கர் நிலம் எடுக்கும் பணி அங்கே துவங்கிவிட்டது. வெகுவிரைவில் அந்த விமான நிலைய விரிவாக்கப் பணியும் நிச்சயம் முடிக்கப்படும்.

ஓசூர் 2.0 சொல்லுமளவிற்கு புதிய விமான நிலையம்!

தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதிகளுக்கு, குறிப்பாக முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் காலத்திலேயே, ஓசூர் பகுதிக்கு மிகப்பெரிய தொழில் வளர்ச்சியைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்பதற்காகத்தான், TVS போன்ற பெருநிறுவனங்களை அங்கே கொண்டுவந்து சேர்த்தார். இப்பொழுது, Hosur 2.0 என்று சொல்லும் அளவிற்கு ஓசூருக்கு புதிய விமான நிலையத்தை அறிவித்து, முதலமைச்சர் அவர்கள் அங்கே புதிய ஒரு பெரிய தொழிற்புரட்சியை kick start செய்திருக்கிறார். வெளியே இருக்கும் சிலர் இந்த விமான நிலையம் தொடர்பாக பல சந்தேகங்களை எழுப்பி வருகிறார்கள். ஓர் அரசாங்கம், அதுவும் திராவிட நாயகன் அவர்களின் அரசாங்கம், ஒரு திட்டத்தை அறிவிப்பதற்கு முன்னர், மிகுந்த உன்னிப்பாக அந்தத் திட்டத்தின் செயல்பாடுகளை எப்படி செய்ய முடியும்; எப்படி அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்பதையெல்லாம் தீர ஆராய்ந்த பிறகே, அந்தத் திட்டத்தை அறிவிப்பார்கள் என்பதை மட்டும் இங்கே கூறி, நிச்சயமாக ஓசூரில் புதிய விமான நிலையம் அமையும் என்று உறுதியாகக் கூறுகிறேன். தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் தொடர்ந்து அவர் பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். நம்முடைய அவை முன்னவர் அவர்களுக்கு ஒரே ஒரு சின்ன செய்தி. அதைச் சொல்லவில்லையென்றால் அப்புறம் அவர் கோபித்துக் கொள்வார். வேலூரில் உள்ள TEL மற்றும் மகி மண்டலம் பகுதியில் SIPCOT உருவாக்குவதற்கான பணிகள் துவங்கியிருக்கின்றன. வேலூரில் புதிய TIDEL Neo Park பணியும் வெகு விரைவில் துவங்கும்; வெகுவிரைவில் திறப்பு விழா நடக்கும்.

இந்தியாவில் முதலீடு செய்ய எல்லோரும் முன்வரும்போது, பல நிறுவனங்கள், Investors இங்கு வரும்போது, அவர்கள் தட்டும் முதல் கதவு முதலமைச்சர் அவர்களின் அலுவலகமாகத் தான் இருக்கிறது. ஆகையால் தான், இன்று ‘டாடா ஜாகுவார்லேண்ட் ரோவர்’ போன்ற பெரு நிறுவ னங்கள், அதுவும் ராணிப்பேட்டை போன்ற வட மாவட்டங்களுக்கு, அங்கேயே சென்று அவர்கள் புதிய நிறுவனங்களைத் துவங்குவதற்காக, 9 ஆயிரம் கோடி ரூபாயில், 14 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கும் இந்த மகத்தான நிறுவனம் ‘டாடா ஜாகுவார்லேண்ட் ரோவர்’ வாகன தயாரிப்பு நிறு